भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

**भाग XV अनूभाग 1**

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

**नई दिल्ली, सुक्रवार, 13 अकतूबर, 2000/1922 सका**

New Delhi, Friday, 13th October 2000/1922 Saka

புது தில்லி, வெள்ளிக்கிழமை 13, அக்டோபர் 2000/1922 சக

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

The Translation in Tamil of the Foreign Trade (Development and Regulation) Act, 1992 (22 of 1992), the All India Council for Technical Education Act, 1987 (52 of 1987), The Beedi Workers Welfare Fund Act, 1976 (62 of 1976) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992 (22/1992), அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 1987 (52/1987), பீடித் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியச் சட்டம், 1976 (62/1976) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**[Price : Rs. 26.00**

# அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992

(சட்ட எண் 22/1992)

[1992, ஆகஸ்ட் 7]

இந்தியாவிற்குள் இறக்குமதிகளுக்கு வசதி செய்து ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலம் அயல்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குறுத்துவதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் நாற்பத்து மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

## அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992 என்று வழங்கப்பெறும். குறுந் தலைப்பும் தொடக்கமும்.

(2) இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 11 முதல் 14 வரை உடனடியாகச் செல்லாற்றல் பெறும்; மற்றும் எஞ்சிய வகையங்கள், 1992, ஜூன் 19 அன்று செல்லாற்றல் பெறுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள்வரையறைகள்.

(அ) "நீதிமுறைத் தீர்வளிக்கும் அதிகாரஅமைப்பு" என்பது, பிரிவு 13 இல் அல்லது அதன்படி குறித்துரைக்கப்படும் அதிகாரஅமைப்பு என்று பொருள் படும் ;

(ஆ) "மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு" என்பது, பிரிவு 15 இன் உட்பிரிவு (1)இல் அல்லது அதன்படி குறித்துரைக்கப்படும் அதிகார அமைப்பு என்று பொருள்படும் ;

(இ) "ஊர்தி" என்பது, வண்டி, கலம், வானூர்தி எதுவும் அல்லது விலங்கு எதுவும் உள்ளடங்கலாக பிற போக்குவரத்துச் சாதனம் எதுவும் என்று பொருள்படும் ;

(ஈ) "தலைமை இயக்குநர்" என்பது, பிரிவு 6இன்படி அமர்த்தப்பட்ட அயல்நாட்டு வணிகத் தலைமை இயக்குநர் என்று பொருள்படும் ;

(உ) "இறக்குமதி" மற்றும் "ஏற்றுமதி" என்பன, முறையே, சரக்குகள் எதனையும் நிலவழி, நீர்வழி அல்லது வான் வழியாக இந்தியாவிற்குள் கொண்டு வருவது அல்லது இந்தியாவிற்கு வெளியே எடுத்துச் செல்வது என்று பொருள் படும் ;

(ஊ) "இறக்குமதியாளர் ஏற்றுமதியாளர் குறியீட்டு எண்" என்பது, பிரிவு 7இன்படி வழங்கப்பட்ட குறியீட்டு எண் என்று பொருள்படும் ;

(எ) "உரிமம்" என்பது, இறக்குமதி ஏற்றுமதி உரிமம் என்று பொருள் படும் ; மற்றும் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் சுங்கத் தடை நீக்க அனுமதிச்சீட்டினையும் பிற அனுமதி எதனையும் உள்ளடக்கும் ;

(ஏ) "ஆணை" என்பது, பிரிவு 3இன்படி மைய அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படும் ஆணை எதுவும் என்று பொருள்படும ; மற்றும்

(ஐ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச்சட்டத்தின்படி வகுக்கப்படும் விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.